

dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Vol : 04 மலர் : 04 | Issue : 107 இதழ் : 107 | 4 Pages 4 பக்கங்கள் | 15.11.2026 15.11.2026 | Sunday ஞாயிற்றுக்கிழமை | Price Rs. 6 விலை ரூ.6 | Annual Subscription Rs: 1825 வருட சந்தா ரூ.1825



செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்
விளக்கம்:
செவியால் கேள்விச் சுவை உணராமல் வாயின் சுவையுணர்வு மட்டும் உடைய மக்கள், இறந்தாலும் என்ன, உயிரோடு வாழ்ந்தாலும் என்ன.

காவல் நிலையங்களே மரணக் கூடங்களாக மாறுகின்றனவா? டிடிவி தினகரன் கேள்வி

சென்னை, நவ. 15

செக்கானூரணிகாவல்நிலையத்தில் லாரி ஓட்டுநர் மர்ம மரணம் குறித்து அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக, அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

மதுரை மாவட்டம், செக்கானூரணி காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட தேனி மாவட்டத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் ஒருவர், சந்தேகத்திற்குரிய வகையில் காவல் நிலையத்திலேயே உயிரிழந்திருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

தவெக ஆட்சிப் பொறுப்பேற்ற ஆறு மாதங்களில் அடுத்தடுத்து அரங்கேறிய ஆறுக்கும் மேற்பட்ட காவல் மரணங்களின் தொடர்ச்சியாகவே இச் சம்பவமும் நடைபெற்றிருப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், உயிரிழந்தவரின் உறவினர்கள், இம்மரணம் குறித்த உண்மை நிலையை விளக்கக் கோரி காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.



தமிழகத்தில் அன்றாடம் அரங்கேறும் கொலை, கொள்ளை, பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் மற்றும் போதைப்பொருட்களின் தாராளப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தத் தவறியுள்ள தவெக அரசின் ஏவல் துறையாகக் காவல்துறை மாறியுள்ள நிலையில், சந்தேகத்திற்குரிய இம்மரணம் குறித்த செய்தி வெளியான ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே வழக்கின் விசாரணையை சிபிசிஐடிக்கு மாற்றியிருப்பதும், செக்கானூரணி காவல் நிலைய காவல் ஆய்வாளரைப் பணியிடைநீக்கம் செய்திருப்பதும் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகின்றன.

காவல் நிலையங்களுக்குப் புகார் அளிக்க வரும் பொதுமக்களை அவமதிக்கும் வகையில் பேசுவது, தரக்குறைவாக நடத்துவது, மிரட்டி ஆளுங்கட்சிக்கு ஆதரவாகச் செயல்படுமாறு அச்சுறுத்துவது, அதிகாரத்தைத்தவறாகப் பயன்படுத்துவது எனத் தங்களுக்கான பொறுப்புணர்வையும் கட்டுப்பாட்டையும் மறந்து, அரக்கத்தனமாகச் செயல்படும் ஒரு சில காவலர்களால் ஒட்டுமொத்தக் காவல்துறையின் மீதான நம்பகத் தன்மையே கேள்விக்குறியாகும் நிலை உருவாகியுள்ளது. எனவே, செக்கானூரணிகாவல்நிலையத்தில் சந்தேகத்திற்குரிய வகையில் நடைபெற்றுள்ள மரணம் குறித்து விரிவான மற்றும் நேர்மையான விசாரணைநடத்தி,உண்மைநிலவரத்தை வெளிக்கொண்டு வருவதோடு, புகார் அளிக்க வருபவர்களாக இருந்தாலும், விசாரணைக்காக அழைத்து வரப்படுபவர்களாக இருந்தாலும், அனைவரையும் மனித மாண்புடன் நடத்த வேண்டும் எனத் தனது கட்டுப்பாட்டில் உள்ள காவல்துறையினருக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கிடவேண்டும்எனமுதல்அமைச்சரை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீன மக்களுக்கு நிரந்தர இறையாண்மை வழங்கும் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு



வாஷிங்டன், நவ.15

பாலஸ்தீன மக்களுக்கு நிரந்தர இறையாண்மை வழங்கும் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு அளித்துள்ளது;

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. பாலஸ்தீனத்தின் மேற்கு கரையில் உள்ள பல பகுதிகளை இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. அதேவேளை, ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பகுதியில் இருந்து இஸ்ரேல் விலக வேண்டும் என்ற ஐநா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில், பாலஸ்தீன மக்களுக்கு நிரந்தர இறையாண்மை வழங்கும் ஐ.நா. பொதுச்சபையின் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு அளித்துள்ளது. உருகுவே கொண்டு வந்த இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்துள்ளது.

கிழக்கு ஜெருசலேம், சிரியாவின் கோலன் ஹைட்ஸ், ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பகுதிகளில் உள்ள இயற்கை வளங்கள் மீது பாலஸ்தீன மக்களுக்கு நிரந்தர இறையாண்மை வழங்கும் இந்த தீர்மானத்திற்கு இந்தியா உள்பட 193 நாடுகள் ஆதரவு அளித்துள்ளன. இந்த தீர்மானத்திற்கு எதிராக இஸ்ரேல், அமெரிக்கா உள்பட 7 நாடுகள் வாக்களித்துள்ளன. அதேவேளை, இந்த வாக்கெடுப்பில் 11 நாடுகள் பங்கேற்கவில்லை.


டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ரூ. 6.40 கோடி நிதியுதவி வழங்கும் இந்தியா



கொழும்பு, நவ.15

இலங்கையில் கடந்த ஆண்டு வீசிய 'டித்வா' புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை தொடர்ந்து, அங்கு மறுவாழ்வு மற்றும் மறுகட்டுமான பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கை மதிப்பில் ரூ.22.5 கோடியை (இந்திய மதிப்பில் சுமார்ரூ.6.40கோடி)நிதியுதவியாக வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது.ஜெ.பி.நட்டா சந்திப்புஇந்தியா, இலங்கை, தாய்லாந்து உள்ளிட்ட 7 நாடுகள் அங்கம் வகிக்கும் 'பிம்ஸ்டெக்' (BIMSTEC) அமைப்பின் சுகாதாரமந்திரிகள்கூட்டத்தில்பங்கேற்பதற்காகமத்தியசுகாதாரத்துறைமந்திரி ஜெ.பி.நட்டா இலங்கை தலைநகர் கொழும்பு சென்றார்.இலங்கைக்கு நிதியுதவிஅங்குஅவர்இலங்கைசுகாதாரத்துறைமந்திரிநலிந்தஜெயதிஸ்ஸவை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த சந்திப்பை தொடர்ந்து, இலங்கைக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட உள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.100 ஆம்புலன்சுகள்முன்னதாக, இலங்கையின் அவசரகால மருத்துவ சேவையை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், 52.8 லட்சம் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில்சுமார்ரூ.50கோடி)நிதியுதவியுடன்,கூடுதலாக100ஆம்புலன்சுகளை வழங்குவதற்கானபுதியஒப்பந்தம்கடந்தபுதன்கிழமைஅன்று இந்தியாமற்றும் இலங்கைஇடையேகையொப்பமானது.22லட்சம்பேர்பாதிப்புகடந்தஆண்டு நவம்பர் மாதம் இலங்கையைத் தாக்கிய 'டித்வா' புயல் காரணமாக 600க்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 22 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் 2 கப்பல்கள் மோதல்; 32 பேர் காயம்



நியூ ஆர்லியன்ஸ் நவ.15

அமெரிக்காவில் 2 கப்பல்கள் மோதி கொண்டதில் 32 பேர் காயம் அடைந்தனர்.

அமெரிக்காவில் நியூ ஆர்லியன்ஸ் நகரத்திற்கு உட்பட்ட பகுதியில், மிஸ்ஸிஸிப்பி ஆற்றில், அமெரிக்கன் ஹெரிடேஜ் என்ற பெயரிடப்பட்ட சொகுசுகப்பல்சென்று கொண்டிருந்தது. சொகுசு கப்பலில் 129 பயணிகள் மற்றும் கப்பல் ஊழியர்கள் இருந்தனர்.

அந்த கப்பல் லூசியானா மற்றும் மிஸ்ஸிஸிப்பி உள்ளிட்ட பகுதிகளில் நின்று சென்றது. அப்போது அதன் மீது அட்லாண்டிக் ஆஸ்பால்ட் என்ற சரக்கு கப்பல் ஒன்று மோதியது. 8 நாட்கள் சொகுசு பயணம் முடிந்த நிலையில் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் சொகுசு கப்பல் நீரில் சரிந்தது. அதில் சிக்கிய பயணிகள் உதவி கேட்டு அலறினர். அவர்களை மீட்கும் பணிக்காக போலீசார், படகோட்டிகள் மற்றும் பிற மீட்பு குழுவினர் உடனடியாக உதவிக்கு சென்றனர். அப்போது, ஆற்றில் படகு, கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இந்த சம்பவத்தில் 32 பேர் சிக்கி காயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு, மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுக்கு பெரிய அளவில் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. மீட்பு பணியை சிறந்த பணி என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பாராட்டியுள்ளார்.

11 வருடம் பழமையான, 4 அடுக்குகளை கொண்ட இந்த கப்பலில் 150 பேர் வரை பயணிக்க முடியும். கண்ணாடியால் மூடப்பட்ட உணவு விடுதி, உடற்பயிற்சி மையம் மற்றும் விருந்தினர்கள் தங்க வசதியாக 3 அறைகள் உள்ளிட்ட வசதிகளை இந்த கப்பல் கொண்டுள்ளது. இந்த விபத்து மிஸ்ஸிஸிப்பியில் நடந்த ஓர் அதிசயம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சேலம்: லாரி டிரைவர் வீட்டில் 23 பவுன் நகைகள் கொள்ளை!



சேலம், நவ.15

சேலம் மாவட்டம் சங்ககிரி அருகே லாரி டிரைவர் வீட்டின் பூட்டை உடைத்து 23 பவுன் தங்க நகைகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்துச் சென்றனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து கொள்ளையர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

சேலம் மாவட்டம் சங்ககிரி அருகே தேவண்ணகவுண்டனூர் சத்யா நகரை சேர்ந்தவர் பழனிவேல் (47). லாரி டிரைவரான இவருடைய மனைவி செல்லம்மாள். இவர்களது மகள் தனஸ்ரீ (16).

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை பழனிவேல் வழக்கம்போல் வேலைக்கு சென்றார். மாலையில் வடுகப்பட்டி அரசு பள்ளியில் பிளஸ்1 படிக்கும் தனது மகளை அழைத்து வருவதற்காக செல்லம்மாள் வீட்டை பூட்டிவிட்டு சென்றார்.

பள்ளியில்இருந்துமகளைஅழைத்துக்கொண்டசெல்லம்மாள், சங்ககிரி பஸ் நிலையம் அருகே உள்ள தனது தோழி அமுதா வீட்டிற்கு சென்றார். பின்னர் இரவு அங்கு சென்ற பழனிவேல், மனைவி மற்றும்மகளைஅழைத்துக்கொண்டுவீட்டிற்குவந்தார்.

அப்போது வீட்டின் கதவு பூட்டு உடைக்கப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேலும், வீட்டின் வாசலில் மகளின் தங்க தோடு ஒன்று கிடந்தது.

இதையடுத்து வீட்டிற்குள் சென்று பார்த்தபோது, பீரோவில் இருந்த துணிமணிகள் உள்ளிட்ட பொருட்கள் சிதறிக் கிடந்தன. மேலும், பீரோவில் வைத்திருந்த 23 பவுன் தங்க நகைகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்துச் சென்றது தெரியவந்தது.

இதுகுறித்து பழனிவேல் சங்ககிரி போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் செந்தில்குமார், சப்இன்ஸ்பெக்டர் அழகுதுரை மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர்.

மேலும், அருகில் உள்ள வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களில் கொள்ளையர்களின் உருவம் பதிவாகி உள்ளதா? என்பது குறித்து போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்தகொள்ளைசம்பவம்தொடர்பாகபோலீசார்வழக்குப்பதிவு செய்து மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

மதுரை நகைக்கடை கொள்ளை: பழங்காநத்தத்தில் இளைஞர் வீட்டில் அதிரடி சோதனை போலீசார் குவிப்பு

மதுரை, நவ.15

மதுரை பழங்காநத்தம்காளவாசல் பைபாஸ் சாலையில் உள்ள பிரபல நகைக்கடையில் ரூ.21 கோடி தங்க, வைரநகைகள் கொள்ளை போன சம்பவம் தொடர்பாக தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர விசாரணை நடந்து வருகிறது. இந்த நிலையில் கொள்ளையன் தப்பிச் சென்றதாக கூறப்படும் சாலைகளில் இருந்த கண்காணிப்பு கேமராக்களை போலீசார் ஒவ்வொன்றாக சோதனை செய்தனர். அதில் அவன் மாடக்குளம் சாலை வழியாக பெண்களுக்கான இருசக்கர வாகனத்தில் தப்பிச்சென்றது உறுதி செய்யப்பட்டது.

இந்த சம்பவம் நடந்த கடையின் பின்புற சாலையில் இருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள ஒரு தெருவை சேர்ந்த வாலிபர் மீது போலீசாருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து அந்த வாலிபரின் வீட்டில் சோதனை செய்வதற்காக 100க்கும் மேற்பட்ட போலீசார் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர். பின்னர் போலீசார் அந்த வீட்டில் புகுந்து 7 மணி நேரமாக நேற்று இரவில் அதிரடி சோதனை நடத்தினர்.

வீட்டில் உள்ள ஒவ்வொரு அறைகள் மற்றும் வெளிப்பகுதி, மாடியில் உள்ள அறைகள் என அனைத்து இடங்களிலும் அங்குலம் அங்குலமாக சோதனை செய்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்துஅந்ததெருபகுதிமுழுவதும்போலீசார்கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. ஆனால் கொள்ளை போன நகைகள் எதுவும் கிடைக்கவில்லை. சந்தேகப்படும்அந்த வாலிபர்குறித்து போலீசார் விசாரணை நடத்தியதில் அவர், கடைசியாக வீட்டுக்கு வந்து சென்ற பின்பு, பல மணி நேரமாக வீட்டுக்கு வராமல் இருந்ததாக கூறப்படுகிறது. இதனால் அந்த பகுதியே பரபரப்பாக காணப்பட்டது.

பனை மரபணு ஆய்வுக்கு ரூ.50 லட்சம் ஒதுக்கீடு வனத்துறை தகவல்



சென்னை, நவ.15

தமிழகத்தில் மாநில மரமான பனை மரத்தை பாதுகாப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை, தமிழக அரசு எடுத்து வருகிறது. கடும் வறட்சியை தாங்கி வளரும் பனை மரங்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருவதாக இயற்கை ஆர்வலர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர். நிலத்தில் மண் அரிப்பு ஏற்படாமல் பாதுகாப்பதற்கு பனை மரங்கள் பேருதவியாகஉள்ளன. இதனால், பசுமை தமிழகம் திட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழகத்தில் ஒரு கோடி பனை விதைகள் நடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், பனை மரங்களை பாதுகாப்பதற்கான புதிய முயற்சிகளை, வனத்துறை எடுத்து வருகிறது. அதன்படி, பனையின் மரபணுவை பாதுகாக்க, புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, வனத்துறை அதிகாரி ஒருவர்கூறுகையில், "தமிழகத்தில் பனை மரத்தை பாதுகாக்க, நீண்டகால திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம். பனையின் மரபணு பண்புகளை வகைப்படுத்துதல், மரபணு மேம்பாடு ஆகியவற்றை அடிப்படை கூறுகளாக வைத்து, இத்திட்டம் செயல் படுத்தப்படும். பனைமரபணுபாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு திட்டத்துக்கு, 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ., குறித்த புகாரை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தார் கலெக்டர்



சென்னை, நவ.15

த.வெ.க. ஆட்சி அமைந்து 6 மாதம் நிறைவடைந்து உள்ளது. சட்டம்ஒழுங்குஉள்ளிட்டபல்வேறு பிரச்சினைகள் குறித்து அரசை நோக்கி எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வரும் நிலையில், சமீபகாலமாக த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் சர்ச்சையில் சிக்கி வருகிறார்கள்.

துணைசபாநாயகர்ரவிசங்கர்,தன்னிடம் புகார் கொடுக்க வந்தவரை தாக்கியதாக கூறப்படும் விவகாரத்தில் சிக்கியுள்ள நிலையில், கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டருக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக த.வெ.க. எம்.எல்.ஏ. அருள் விக்னேஷ் மீது புகார் எழுந்து இருக்கிறது.

தற்போது இந்த விஷயம் மக்கள் மத்தியில் பேசுபொருளாக மாறியுள்ளது. சர்ச்சையில் சிக்கியுள்ள த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகளும், த.வெ.க. கூட்டணி கட்சிகளும் குரல் கொடுத்து வருகின்றன.

இந்த சூழலில் இந்த குற்றச்சாட்டை த.வெ.க. எம்.எல்.ஏ. அருள் விக்னேஷ், சட்ட அமைச்சர் நிர்மல்குமார் ஆகியோர் மறுத்துள்ளனர். ஆனால், கலெக்டர் இது தொடர்பாக கருத்து எதையும் தெரிவிக்கவில்லை. இதற்கிடையே, இந்த சம்பவம் தொடர்பாக 10 நாட்களுக்கு முன் விழுப்புரம் கலெக்டரும், பத்மஜாவின்கணவருமானஷேக்அப்துல் ரகுமான், தலைமை செயலர் சாய்குமாரை சந்தித்துபுகார்அளித்துள்ளார். இதுகுறித்து தலைமை செயலாளரும் எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை. இது பல்வேறு சந்தேகங்களை எழுப்பி வருகிறது. இந்நிலையில் தலைமை செயலாளருக்கு அளித்த புகார் விபரங்களை மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சி துறைக்கு, முறைப்படி கலெக்டர் பத்மஜா அனுப்பி வைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

உரக்கடை மேற்கூரையை உடைத்து ரூ.30 லட்சம் கொள்ளை

தூத்துக்குடி, நவ.15

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி பகுதியில் உரக்கடை மேற்கூரையை உடைத்து ரூ.30 லட்சத்தை கொள்ளையடித்துச் சென்ற மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே உள்ள பசுவந்தனை தீத்தாம்பட்டியை சேர்ந்தவர் ரவிக்குமார் (வயது 34). இவர் கோவில்பட்டி எட்டயபுரம்சாலையில்உரக்கடைநடத்தி வருகிறார். அவர் நேற்று காலை வந்து பார்த்தபோது கடையின் மேற்கூரை உடைந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

மேலும் உரக்கடைக்குள் இருந்த பணப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்த ரூ.30 லட்சத்தை மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்றது விசாரணையில் தெரியவந்தது. மானாவாரி விவசாயத்திற்காக பொதுமக்களிடம் வசூலிக்கப்பட்ட அந்தத் தொகையை கொள்ளையடித்த மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

குளிர்காலத்தில் ரம்மியமாகக் காட்சியளிக்கும் கொடைக்கானல்: சுற்றுலா பயணிகள் உற்சாகம்

திண்டுக்கல், நவ. 15

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைத்தொடர்களில் குளிர்காலம் தொடங்கியுள்ளதால், கடல் அலைகள் போல மலை முகடுகளைத் தழுவிச் செல்லும் வெண்மேகங்களின் ரம்மியமான காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் சமீபத்திய மழை மற்றும் குளிரின் தாக்கத்தால் 'மலைகளின் இளவரசி' என அழைக்கப்படும் கொடைக்கானல் பள்ளத்தாக்குகள் முழுவதும் பஞ்சு போன்ற வெண்மேகக் கூட்டத்தால் சூழப்பட்டுக் காட்சியளிக்கின்றன. பகல் நேரங்களிலும் நிலவும் இதமான குளிர் மற்றும் பனிமூட்டம் காரணமாக, மலைச் சிகரங்கள் மேகக் கடலில் மிதப்பது போன்ற அற்புதத் தோற்றத்தை அளிக்கின்றன.



கொடைக்கானல் மலைப்பகுதிகளில் வெண்மேகங்கள் கடல் அலை போலப் படர்ந்து செல்லும் வான்வழி ட்ரோன் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வேகமாகப் பகிரப்பட்டு வருகின்றன. இந்த இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகள் பார்ப்போரைப் பரவசத்தில் ஆழ்த்தியுள்ளன.

வார இறுதி நாட்களை முன்னிட்டு கொடைக்கானலுக்கு வருகை தந்துள்ள சுற்றுலா பயணிகள், கோக்கர்ஸ் வாக், பில்லர் ராக் மற்றும் குணா குகை உள்ளிட்ட இடங்களில் இந்த ரம்மியமான சூழலைக் கண்டு ரசித்து வருகின்றனர்.

வங்கக்கடலில் புயல் சின்னம்: தயார் நிலையில் இந்திய கடலோரக் காவல் படை

சென்னை, நவ.15

வங்கக்கடலில் புயல் சின்னம் உருவாகியுள்ள நிலையில், மக்களின்உயிர்களைக் காக்கவும், உடைமைகளைப் பாதுகாக்கவும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்தியக் கடலோரக் காவல்படை மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கை பின்வருமாறு ; இந்தியக் கடலோரக் காவல்படை" தென்கிழக்கு வங்கக் கடலில் நவம்பர் 13, 2026 அன்று ஒரு காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவான தற்கான அறிகுறிகள் தென்பட்டன. இது புயலாக வலுப்பெறக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியக் கடலோரக் காவல்படை, கிழக்குக் கடற்கரைப் பகுதியில் தனது தயார்நிலையை கணிசமாக அதிகரித்துள்ளது. மாறிவரும் வானிலைச் சூழலில், மக்களின் உயிர்களைக் காக்கவும், உடைமைகளைப் பாதுகாக்கவும், கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்தியக் கடலோரக் காவல்படை மேற்கொண்டு வருகிறது.



கடல் ரோந்துப் பணிகள்இந்தியக் கடலோரக் காவல் படையின்கப்பல்கள் மற்றும்வானூர்திகள் எந்த நேரத்திலும் செயலாற்றக்கூடிய வகையில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. கடலோரக் காவல்படையின் ரேடார் நிலையங்கள், உருவாகி வரும் இந்த வானிலை அமைப்பைக் தொடர்ந்து கண்காணித்து வருகின்றன. மேலும், கடலில் மீனவர்கள், வணிகக் கப்பல்கள் மற்றும் பிற கடல் பயணிகளுக்குத் தகுந்த நேரத்தில் வானிலை எச்சரிக்கைகளையும் பாதுகாப்பு ஆலோசனைகளையும் வழங்க, கடல் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மற்றும் பிற இடங்களில் உள்ள தொலைநிலை செயல்பாட்டு நிலையங்கள், உரிய தகவல்கள் உடனுக்குடன் சென்றடைவதை உறுதிசெய்ய, பிராந்திய மொழிகளில் வானிலை எச்சரிக்கைகளையும் ஆலோசனைகளையும் உயர் அலைவரிசை கருவிகள் மூலம் ஒலிபரப்பி வருகின்றன. நங்கூரமிட்டுள்ள கப்பல்களுக்கு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், தகுந்த முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்காகத் துறைமுக அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு வருகிறது. பேரிடர் மீட்புக் குழுக்கள்தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஆந்திரப் பிரதேசக் கடற்கரைப் பகுதிகளில், அவசர காலச் சூழல்களைக் கையாள்வதற்காக இந்தியக் கடலோரக் காவல்படையின் பேரிடர் மீட்புக் குழுக்கள் (DRTs) தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் பட்சத்தில், தேடல் மற்றும் மீட்புப் பணிகள் (SAR), மற்றும் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணப் பணிகளை (IIADR) உடனடியாக மேற்கொள்ளும் வகையில், இந்தியக் கடலோரக் காவல்படை, சிவில் நிர்வாகம், துறைமுக அதிகாரிகள் மற்றும் பிற கடல்சார் பங்குதாரர்களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பைப் பேணி வருகிறது. ஏதேனும் அவசரச் சூழல் ஏற்பட்டால், அதற்கு விரைவாகவும் திறம்படவும் பதிலளிக்க

இந்தியக் கடலோரக் காவல்படை முழுமையாகத் தயாராக உள்ளது.கடல்சார் பாதுகாப்பில் தனது உறுதியான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், கடலில் உயிர்களையும் உடைமைகளையும் காக்க இந்தியக் கடலோரக் காவல்படை விழிப்புடனும், எந்த நேரத்திலும் பணியைச் செய்யத்தயாரானநிலையிலும் உள்ளது."இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

முதல்அமைச்சர் ஆய்வு செய்த பிறகும் காவல் மரணங்கள் அதிகரிப்பு உதயநிதி ஸ்டாலின் கண்டனம்

சென்னை, நவ. 15

மதுரை செக்கானூரணி காவல் நிலையத்திற்கு லாரி ஓட்டுநர் பாலகிருஷ்ணனை, சட்டத்துக்குப் புறம்பாக இரவில் விசாரணைக்கு அழைத்தது ஏன்? தற்கொலை செய்து கொண்டார் என்றால், அந்த அளவுக்கு என்ன நெருக்கடி ஏற்பட்டது? என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பி உள்ளார். மதுரை செக்கானூரணி காவல் நிலையத்தில் லாரி எரிந்தது தொடர்பாக புகார் அளிக்க சென்ற பாலகிருஷ்ணன் என்பவர் காவல் நிலையத்திலேயே மரணம் அடைந்திருக்கிறார்.புகாரளித்த பாலகிருஷ்ணனைசட்டத்துக்குப் புறம்பாக இரவில் விசாரணைக்கு அழைத்தது ஏன்? விசாரணைக்குச் சென்றவர், காவல் நிலைய கழிவறையில் தற்கொலை செய்து கொண்டார் என்றால், அந்த அளவுக்கு என்ன நெருக்கடி ஏற்பட்டது ?பாலகிருஷ்ணனின் உடலைக்கூட காட்டாமல் அவசர அவசரமாக Post Mortem செய்ய அனுப்பியதாக அவரின் உறவினர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். இந்த அவசரத்திற்கு என்ன காரணம்? விசாரணை என்ற பெயரில் காவலர்களே அவரை அடித்துக் கொன்றார்களா?



இந்த கேள்விகளுக்கு எல்லாம் துறைக்குப் பொறுப்புவகிக்கும்டம்மி முதலமைச்சர் பதில் அளிக்க வேண்டும் என்று மதுரை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, முறையாக விசாரித்து, இந்த மரணத்துக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாலகிருஷ்ணனின் மரணத்துக்கு நீதி கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்ய வேண்டும்.இதே போல, 100 நாள் வேலை முறையாக வழங்கப்படவில்லை என்று கடலூர் மாவட்டம் புதுப்பேட்டையில் புகாரளிக்க சென்ற பெண் ஒருவர், காவல் நிலையத்திலேயே தீக்குளித்துள்ளார். இந்த சம்பவத்தில் காரணமானவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அப்பெண்ணின் உறவினர்கள் போராடி வருகின்றனர். தன் துறையில் நடக்கும் அவலங்களுக்குப்பொறுப்பேற்கவோ நடவடிக்கை எடுக்கவோ வக்கின்றி, Punch Dialog பேசி ஆட்சி நடத்தும் இந்த முதல்அமைச்சர் Rotten stageல் சட்டம் ஒழுங்கை எப்போது காப்பாற்றுவார்? என அதில் பதிவிட்டுள்ளார்.

புகார் அளிக்க வந்தவர் மர்ம சாவு: காவல் நிலைய உயிரிழப்புகளை தடுக்க வேண்டும் அன்புமணி

சென்னை, நவ. 15

புகார் அளிக்க வந்தவர்களாக இருந்தாலும், காவல் நிலைய வளாகத்தில் அவர்களின் உயிருக்கு காவல்துறை தான் பொறுப்பு என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.உயிரிழப்புகள்இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:மதுரை செக்கானூரணி காவல் நிலையத்தில் புகார் அளிப்பதற்காக சென்ற பாலகிருஷ்ணன் என்பவர் இரவு முழுவதும் காவல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்ட நிலையில், இன்று காலை காவல் நிலைய கழிப்பறையில் தூக்கில் தொங்கியவாறு பிணமாகக்கண்டெடுக்கப்பட்டுள்ளார்.காவல்நிலையங்களில் ஐயத்திற்கு இடமான வகையில்உயிரிழப்புகள்நிகழ்வது கவலையளிக்கிறது.தற்கொலைதேனி மாவட்டத்தைச் சேர்ந்த ஏலக்காய் வணிகரிடம் ஓட்டுனராக பணியாற்றி வரும் பாலகிருஷ்ணன், கடந்த சில நாள்களுக்கு முன் ஏலக்காய் ஏற்றி வந்த சரக்குந்து தீப்பிடித்து எரிந்தது குறித்து புகார் அளிக்க வந்ததாகவும், ஆனால், அவரையே சந்தேகத்தின் அடிப்படையில் விசாரித்ததால் அவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் காவல் துறை சார்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த விளக்கத்தை ஏற்க முடியாது என்று பாலகிருஷ்ணனின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.சிபிசிஐடி விசாரணைவிசாரணைக் கைதிகளாக இருந்தாலும், புகார் அளிக்க வந்தவர்களாக இருந்தாலும் காவல் நிலைய வளாகத்தில் அவர்களின் உயிருக்கு காவல்துறை தான் பொறுப்பு. அந்த வகையில் பாலகிருஷ்ணனின் உயிரிழப்புக்கும் காவல்துறை தான் பொறுப்பேற்க வேண்டும். இந்த உயிரிழப்பு குறித்து சிபிசிஐடி விசாரணை நடத்த காவல்துறை ஆணையிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இந்த விஷயத்தில் உண்மை வெளிக் கொண்டு வரப்பட வேண்டும்.தமிழ்நாட்டில் கடந்த 6 மாதங்களில் இதுவரை 7 காவல் நிலைய உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன. இனியும் அத்தகைய உயிரிழப்புகள் நிகழாதவாறு தடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8ம் வகுப்பு மாணவருக்கு பாலியல் தொல்லை: ஆசிரியர் போக்சோவில் கைது

நெல்லை, நவ. 15

நெல்லை மாநகரம், பாளையங்கோட்டையில் தனியார் பள்ளி மாணவருக்குப் பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியரை போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.ராமநாதபுரம் மாவட்டத்தைச் சொந்த ஊராகக் கொண்டவர் அருள் பாக்கியம் (வயது 48). இவர் தற்போது நெல்லை மாநகரம், பாளையங்கோட்டை தெற்கு பஜார் பகுதியில் வசித்துக் கொண்டு, பாளையங்கோட்டையில் உள்ள தனியார் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். இந்த நிலையில் ஆசிரியர்அருள் பாக்கியம் அப்பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் மாணவர் ஒருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாகக் கூறப்படுகிறது.போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவுஇதனால் மன உளைச்சலுக்கு ஆளான அந்த மாணவர், வீட்டிற்கு சென்று தனது பெற்றோரிடம் நடந்தவற்றைக் கூறி அழுதுள்ளார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர், உடனடியாக பாளையங்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

பெற்றோரின் புகாரின் பேரில், பாளையங்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர்நாகுமாரி மற்றும் போலீசார் ஆசிரியர் அருள் பாக்கியம் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். ஆசிரியர்கைதுதொடர்ந்து நெல்லை மாநகர துணை போலீஸ் கமிஷனர் சரவணன் உத்தரவின் பேரில், போலீசார் நேற்று சம்பந்தப்பட்ட தனியார் பள்ளிக்குச் சென்று அங்கு பணியிலிருந்த ஆசிரியர் அருள் பாக்கியத்தைக் கைது செய்தனர். பள்ளி ஆசிரியரே தனது மாணவருக்குப் பாலியல் தொல்லை கொடுத்த இச்சம்பவம் பாளையங்கோட்டை பகுதியில் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

மேகதாது அணை விவகாரம்: பாஜக அரசு தமிழ்நாட்டிற்கு விரோதமாக செயல்பட்டு வருகிறது மாணிக்கம் தாகூர்

சென்னை, நவ.15

தமிழ்நாட்டின் ஒப்புதல் இல்லாமல் மேகதாது அணை கட்ட விரிவான திட்ட அறிக்கைக்கு மத்தியஅரசுஅனுமதிகொடுத்தது அப்பட்டமான பாரபட்சமான நடவடிக்கையாகும். இதன்மூலம் பாஜக அரசு தமிழ்நாட்டிற்கு விரோதமாக செயல்பட்டு வருகிறது என மாணிக்கம் தாகூர் குற்றம் சாட்டி உள்ளார்.

இது தொடர்பாக, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

கர்நாடகமாநிலம்மைசூரில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் நரேந்திரமோடி முன்னிலையில் உரையாற்றிய முதல்மந்திரி டி.கே. சிவகுமார் மேகதாது அணை கட்டுவதற்கு கர்நாடகத்திற்கு ஆதரவாக உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பதாகவும், எனவே மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார். இருமாநிலம் சம்பந்தப்பட்ட சர்ச்சைக்குரிய மேகதாது அணை கட்டுவது குறித்து தமிழ்நாடு அரசு உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறது. இந்நிலையில் பிரதமர் மோடி முன்னிலையில் முதல்மந்திரி டி.கே. சிவகுமார் பேசியிருப்பது தமிழ் நாட்டு நலனுக்கு விரோதமானது. ஐம்பது ஆண்டுகால போராட்டத்திற்கு பிறகு பெற்ற காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு, உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிரானதாகும்.



காவிரி நடுவர் மன்றம், உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு கபினி அணையில் இருந்து 60 டிஎம்சி, கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து 52 டிஎம்சி, கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து நீர் அளவை நிலையம் அமைத்துள்ள பிலின்குண்டுலுவரை200கிலோ மீட்டரில் மழை நீரின் மூலம் கர்நாடகாவின் கட்டுப்பாடற்ற நீர் பிடிப்பு பகுதியில் இருந்து கிடைக்கிற 80 டிஎம்சி ஆகியவற்றை சேர்த்தால் தான் தமிழ்நாட்டிற்கு சட்டப்படி கிடைக்க வேண்டிய 177.25 டிஎம்சி நீர் கிடைக்கும். ஆனால் கர்நாடக அரசு எப்பொழுதுமே நமக்கு குறிப்பிட்ட காலத்தில் தர வேண்டிய நீரை தருவதில்லை. பல்வேறு நடவடிக்கைகளுக்குபிறகு தான் காவிரியில் நீரை பெற்று வருகிறோம். இந்நிலையில் கர்நாடக, தமிழ்நாடு எல்லையில் பிலிகுண்டுலுவுக்கு மேலே 4 கிலோமீட்டர் தொலைவில் 67.15 டிஎம்சி கொள்ளளவு கொண்ட மேகதாது அணை கட்டுவதை தமிழ்நாடு கடுமையாக எதிர்த்து வருகிறது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து போராடி வருகிறது.

மேகதாது அணை கட்ட சுப்ரீம் கோர்ட்டு அனுமதி அளித்ததா? கர்நாடக முதல்வரின் பேச்சுக்கு வைகோ கண்டனம்!

சென்னை, நவ.15

மேகதாது அணை கட்ட சுப்ரீம் கோர்ட்டு அனுமதி அளித்துவிட்டதால் மேகதாதுவில் அணை கட்டுவோம் என கர்நாடக முதல்மந்திரியின் பேச்சுக்கு மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: கர்நாடகமாநிலம், மைசூருவில் காஸ்மோஸ் கோளரங்கத்தை பிரதமர் மோடி நேற்று (நவம்பர் 13) திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அம்மாநில முதல்மந்திரி டி.கே.சிவகுமார் பேசும்போது, டி.கே.சிவகுமார் பேச்சு "மேகதாது அணை விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டு, தெளிவான தீர்ப்பை அளித்து விட்டது. கர்நாடகாவில் மேகதாது அணை கட்டப்பட்டே தீரும். இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. சட்ட ரீதியாக சுற்றுச்சூழல் மற்றும்வனத்துறை ஒப்புதல்களை மத்திய அரசு தரவேண்டும். இந்த விவகாரத்தில் கர்நாடகாவுக்கு மத்திய அரசு



உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறோம். அனைத்துத்தரப்பும் ஒருங்கிணைந்து செயல்படுவோம். காவிரி விவகாரத்தில் பிரதமர் தலையிட்டு கர்நாடகாவுக்கு உதவ வேண்டும்" என்று பிரதமர் மோடிக்கு கோரிக்கை வைத்திருக்கிறார்.மேகதாது அணை கட்டுவதற்கு, சுப்ரீம்கோர்ட்டு அனுமதி அளித்து விட்டதாக கர்நாடக முதல்மந்திரி டி.கே. சிவகுமார்மீண்டும் மீண்டும் கட்டவிழ்த்து விடும் கட்டுக்கதை கடும் கண்டனத்திற்குரியது. கடந்த நவம்பர் 9ஆம் தேதி நான் வெளியிட்ட அறிக்கையில் சுப்ரீம் கோர்ட்டு 2018 பிப்ரவரி 16ஆம் தேதி வழங்கிய தீர்ப்பை மிகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறேன். சுப்ரீம் கோர்ட்டு அளித்த தீர்ப்பில் எந்த இடத்திலும் கர்நாடகா அணைக்கட்டிக் கொள்வதற்கு அனுமதி அளிக்கவில்லை. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை சுட்டிக்காட்டிய உச்ச நீதி மன்றம், The upper riparian State shall not take any action so as to affect the scheduled deliveries of water to the lower riparian States. மேல்பகுதி (Upper Riparian) மாநிலம், கீழ்ப்பகுதி மாநிலங்களுக்கு அட்டவணைப்படி வழங்க வேண்டிய நீர்வரத்தைப் பாதிக்கும் வகையில் எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது." கீழ்ப குதி மாநிலம் (Lower Riparian), அதாவது தமிழ்நாடுப் பெற்று வரும் காவிரி நீர் வரத்தைத் தடுக்கும் வகையில் மேல்பகுதி மாநில மான கர்நாடகம் தடுப்பணைகளை அமைக்க கூடாது" என்று உறுதிபட தெரிவித்திருக்கிறது. இந்நிலையில், மத்திய பாஜக அரசின் அனுமதியை வஞ்சகமான முறையில் பெற்று மேகதாது அணை கட்டுவதற்கு கர்நாடக மாநில முதல்மந்திரி டி.கே. சிவக்குமார் முனைந்து இருப்பது அடாவடித்தனமான, சட்டத்தை மீறிய செயலாகும்.கடுமையான அழுத்தம்மத்திய பாஜக அரசு, கர்நாடக மாநிலத்திற்கு மேகதாது அணை கட்ட ஒப்புதல்அளிக்கக்கூடாது. தமிழ்நாடு அரசு உடனடியாகசுப்ரீம் கோர்ட்டில்ஏற்கனவே தொடரப்பட்ட வழக்கை விரைவு படுத்த வேண்டும். மத்திய அரசுக்கு கடுமையான அழுத்தம் கொடுத்து கர்நாடக மாநில அரசின் முயற்சியை முறியடிக்க வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

ஜெம் வீரமணி வீட்டின் பின்புறம் சடலமா? - போலீசார் தீவிரத் தேடுதல் வேட்டை

சென்னை, நவ. 15

சிறுமிகள் பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஜெம் கிரானைட்ஸ் உரிமையாளர் ஆர். வீரமணியின் ராயப்பேட்டை வீட்டின் பின்புறம் சடலம் புதைக்கப்பட்டது என்ற தகவலின் அடிப்படையில், சிறப்பு புலனாய்வுக் குழுவினர் இன்று தீவிரமாகத் தோண்டி சோதனை நடத்தி வருகின்றனர்.ஓட்டுநர் அளித்த அதிர்ச்சி வாக்குமூலம் பல சிறுமிகளைப் பாலியல் வன்கொடுமை செய்ததாக எழுந்த புகாரின் பேரில், கடந்த ஆகஸ்ட் மாதம் ஜெம் வீரமணி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்த வழக்கில் அவருக்கு உடந்தையாக இருந்ததாக அவருடைய ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்கள் சிலரையும் போலீசார் கைது செய்துள்ளனர். சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்டி) அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தினர். விசாரணையில் ராயப்பேட்டை வீட்டின் பின்புறத் தோட்டத்தில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமி ஒருவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு உயிரிழந்து திடுக்கிடும் தகவல் வெளியானது. மேலும், அந்த சிறுமியின் உடல் அந்த தோட்டத்தில் புதைக்கப்பட்டிருப்பதாக



கைதான ஓட்டுநர் பாலா என்பவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.ஜேசிபி உதவியுடன் 10 அடி ஆழத்திற்கு சோதனைஇந்த தகவலைத் தொடர்ந்து, சிறப்பு புலனாய்வுக் குழு மற்றும் போலீசார் இன்று (சனிக்கிழமை) ராயப்பேட்டையில் உள்ள வீரமணியின் வீட்டிற்கு ஜேசிபி உள்ளிட்ட கனரக இயந்திரங்களுடன் விரைந்தனர். வீட்டின் பின்புறம் உள்ள தோட்டப் பகுதியில் சுமார் 10 அடி ஆழத்திற்குப் பள்ளம் தோண்டி தீவிரமாக சோதனை நடத்தப்பட்டு வருகிறது.பலத்த போலீஸ் பாதுகாப்புசோதனை நடைபெறும் பகுதியில் பொதுமக்கள் கூடுவதைத் தடுக்கவும், அசம்பாவிதங்களைத் தவிர்க்கவும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தோண்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவருவதால்,சடலம் எதுவும் மீட்கப்பட்டதா என்பது குறித்த அதிகாரப்பூர்வத் தகவல்கள் சோதனை முடிந்த பிறகே வெளியாகும் என காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருவள்ளூர்: காரில் கடத்திய ரூ.50 லட்சம் ஹவாலா பணம் பறிமுதல் 2 பேர் கைது

திருவள்ளூர், நவ.15 திருவள்ளூர் மாவட்டத்தில் காரில் கடத்திய ரூ.50 லட்சம்ஹவாலாபணத்தை பறிமுதல் செய்த போலீசார் தெலுங்கானாவைச் சேர்ந்த 2 பேரை கைது செய்தனர். வாகன சோதனைசென்னை செங்குன்றத்தை அடுத்த பாடிய நல்லூர் சுங்கச்சாவடி அருகே செங்குன்றம் போலீஸ் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி, சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் சண்முகராஜா மற்றும் போலீசார் நேற்று தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஆந்திராவில்இருந்துதெலுங்கானா பதிவெண் கொண்ட கார் ஒன்று சென்னை நோக்கி அதிவேகமாக வந்தது. அந்த காரின் மீது சந்தேகம் அடைந்த போலீசார்,



அதனை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். காரின் உள்ளே ரகசியமாக கட்டுகட்டாக பணம் பதுக்கி வைக்கப்பட்டு இருப்பதை போலீசார் கண்டுபிடித்தனர். அவற்றை எண்ணிப் பார்த்த போது, மொத்தம் ரூ.50 லட்சம் இருப்பது தெரிய வந்தது. காரில் இருந்தவர்களிடம் அந்த பணத்துக்கான உரிய ஆவணங்கள் எதுவும் இல்லை. இதையடுத்து, கணக்கில் வராத அந்த ரூ.50 லட்சத்தை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும், காரில் வந்த தெலுங்கானா மாநிலத்தைச் சேர்ந்த மகேஷ், சைதி ரெட்டி ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்தனர்.வருமான வரித்துறை அதிகாரிகள் விசாரணைகை தானவர்கள் நடத்திய விசாரணையில் பறிமுதலான ரூ.50 லட்சம் ஹவாலா பணம் என்பது தெரியவந்தது. இதையடுத்து பறிமுதல் செய்யப்பட்ட ரூ.50 லட்சம் பணத்தை மேல்நடவடிக்கைக்காக சென்னை வருமான வரித்துறை அதிகாரிகளிடம் போலீசார் ஒப்படைத்தனர். இந்த பணத்தின் உரிமையாளர் யார்? யாருக்காகக்கடத்திசெல்லப்பட்டது? என்பது குறித்து வருமான வரித்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஒரே நாளில் 12 பேர் மாயம்: காவல்துறையின் கண்காணிப்பு என்ன செய்கிறது? வேல்முருகன் கேள்வி

சென்னை, நவ. 15 ஒரே நாளில் 12 பேர் மாயம்.. தமிழ்நாட்டில் மனித உயிர்களின் பாதுகாப்பு எங்கே? காவல்துறையின் கண்காணிப்பு என்ன செய்கிறது? என வேல்முருகன் கேள்வி எழுப்பி உள்ளார்.இது தொடர்பாக, தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது; கடலூர் மாவட்டத்தில் ஒரே நாளில் 7 இளம் பெண்கள் உட்பட 12 பேர் காணாமல் போயுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்துகின்றன.காணாமல் போனவர்களில் 16 வயது சிறுவனும், 17 வயது சிறுமியும் அடங்கியிருப்பது இந்தச் சம்பவத்தின் தீவிரத்தை உணர்த்துகிறது.ஒரே நாளில் ஒரு மாவட்டத்தில் இத்தனை பேர் காணாமல் போகும் சூழல் உருவாகியிருப்பது சாதாரணமானதல்ல. ஒவ்வொரு குடும்பமும் தங்களது பிள்ளைகளையும் உறவினர்களையும் எங்கு தேடுவது என்று தெரியாமல் தவிக்கும் நிலையில், காவல்துறையின் விசாரணை வேகமும், தேடுதல் நடவடிக்கைகளின் முன்னேற்றமும் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட வேண்டியது அவசியம். அரசு பொறுப்பேற்குமா?ஒரே நாளில் 12 பேர் காணாமல் போகும் அளவிற்கு காவல் துறையின் கண்காணிப்பு பலவீனமாகிவிட்டதா?7 இளம் பெண்கள் மாயமான விவகாரத்தில் பெண்கள் பாதுகாப்பு குறித்த அரசின் வாக்குறுதிகள் எங்கே?சிறார்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்னவாயின?புகார் பதிவதோடு காவல்துறையின் கடமை முடிந்துவிடுகிறதா? காணாமல் போனவர்களை மீட்பதற்கான தீவிர நடவடிக்கை எங்கே?பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு விசாரணையின் முன்னேற்றம் குறித்த தகவல்களை அரசு வழங்கியுள்ளதா?காணாமல் போன ஒவ்வொருவரும் பாதுகாப்பாக மீட்கப்படும் வரை அரசு பொறுப்பேற்குமா?ஆறுதல் வார்த்தைகள் தீர்வாகாதுகாணாமல் போனவர்களின் குடும்பங்களின் கண்ணீருக்கு ஆறுதல் வார்த்தைகள் மட்டும் தீர்வாகாது. ஒவ்வொருவரையும் விரைந்து கண்டறிந்து,



அவர்கள் காணாமல் போனதற்கான பின்னணியை வெளிக்கொண்டு வந்து, குற்றச்செயல் உறுதிப்படுத்தப்பட்டால் தொடர்புடையவர்கள் மீதுகடுமையானசட்டநடவடிக்கை எடுக்க வேண்டும்.மக்களின் பாதுகாப்பு என்பது அரசின் விளம்பரத்திற்கான வாசகம் அல்ல. அது அரசின் அடிப்படைக் கடமை. வாக்குறுதிகளுக்கு என்ன மதிப்பு? பெண்களும் குழந்தைகளும் அச்சமின்றி வாழ முடியாத சூழல் உருவானால், ஆட்சி நிர்வாகத்தின் பாதுகாப்பு வாக்குறுதிகளுக்கு என்ன மதிப்பு?காணாமல் போன அனைவரையும் விரைந்து மீட்டு, உண்மையை வெளிக்கொண்டு வருவதுடன், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் எனத் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதியவரை எரித்துக் கொன்ற பக்கத்து வீட்டுக்காரர்: என்ன காரணம்: வெளியான பரபரப்பு தகவல்

குழித்துறை, நவ.15 மார்த்தாண்டம் அருகே முதியவரை பக்கத்து வீட்டுக்காரர் எரித்துக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. வாக்குவாதம்மார்த்தாண்டம் அருகே உள்ள திக்குறிச்சி கைப்பற்றிவிளையை சேர்ந்தவர் குழந்தைவேல் (வயது 86). இவருடைய மகன் ஜெபமணி (62). இருவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர்.இவர்களுடைய பக்கத்து வீட்டில் வசித்து வருபவர் ஆல்பர்ட் அஸ்வின் (38). மாற்றுத்திறனாளியான இவர் மதுகுடித்து விட்டு வீட்டுக்கு வரும் போதெல்லாம் இந்த முதியவர்களிடம் தகாத வார்த்தைகளால் பேசி தகராறில் ஈடுபட்டு வந்துள்ளார். இதனை தட்டிக்கேட்டதால் ஜெபமணிக்கும், ஆல்பர்ட் அஸ்வினுக்கும் இடையே வாக்குவாதம் முற்றியது. இந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு அவர்களுக்கு தொடர்ந்து ஆல்பர்ட் அஸ்வின் தொந்தரவு கொடுத்து வந்ததாக தெரிகிறது.முற்றிய தகராறுஇந்தநிலையில் நேற்றுமுன்தினம் மாலையில் ஜெபமணி வேலையை முடித்து வீட்டுக்கு வந்த



போது ஆல்பர்ட் அஸ்வின் அங்கு தங்களுக்கு சொந்தமான வீட்டின் சுவரை சேதப்படுத்தியதோடு ஜன்னல் கதவுகளையும் உடைத்துக் கொண்டிருந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இதுபற்றி கேட்டதால் வாய்க்கு வந்தபடி ஆபாச வார்த்தைகளால் ஆல்பர்ட் அஸ்வின் திட்டியுள்ளார். இதனால் பயந்து போன ஜெபமணி போலீசில் புகார் கொடுக்கப்போவதாக கூறி விட்டு அங்கிருந்து சென்றார். அதன்படி மார்த்தாண்டம் போலீஸ் நிலையத்தில் பக்கத்து வீட்டுக்காரரின் அட்டூழியத்தை எடுத்துக் கூறி விட்டு வீட்டுக்கு வந்தார். முதியவர் கொலைஅங்கு வந்த அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அதாவது தந்தை குழந்தைவேல், வீட்டில் எரித்துக் கொல்லப்பட்ட நிலையில் பிணமாக கிடந்தார். கருகிய தந்தையின் உடலை பார்த்து ஜெபமணி கதறி அழுதார். மேலும் இதுபற்றிய தகவல் அறிந்ததும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து கொல்லப்பட்ட குழந்தைவேலின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரி பள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் நடத்திய விசாரணையில், குழந்தைவேலுவை பக்கத்து வீட்டுக்காரர் ஆல்பர்ட் அஸ்வின் உயிரோடு எரித்துக் கொன்ற சம்பவம் அம்பலமானது. வெளியான பரபரப்பு தகவல்ஏற்கனவே ஜெபமணி, குழந்தைவேல் மீது கோபத்தில் இருந்த ஆல்பர்ட் அஸ்வின் நேற்று முன்தினம் ஏற்பட்ட தகராறில் ஆவேசத்தின் உச்சிக்கே சென்றார். வயதானவர்கள் தனக்கு எதிராக செயல்படுகிறார்களே? என மனதுக்குள் நினைத்த அவர், ஜெபமணியை கண்டபடி திட்டிக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில் போலீசில் புகார் கொடுக்கப் போவதாக அவர் கூறி விட்டு அங்கிருந்து கிளம்பி சென்றார். இதனை தொடர்ந்து ஜெபமணிக்கு தக்க பாடம் புகட்டுவதற்காக அவரது தந்தை குழந்தைவேலுவை கொல்லும் மனநிலைக்கு ஆல்பர்ட் அஸ்வின் சென்றுள்ளார். கைது உடனே வீட்டுக்குள் புகுந்த அவர் சமையல் எண்ணெய்யை (பாமாயில்) குழந்தைவேல் மீது ஊற்றி உயிரோடு எரித்துக் கொன்று விட்டு அங்கிருந்து சென்று, வீட்டில் ஒன்றும் தெரியாதது போல் இருந்தது தெரியவந்தது. மேலும் இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிந்து ஆல்பர்ட் அஸ்வினை கைது செய்தனர். முதியவரை பக்கத்து வீட்டுக்காரர் எரித்துக் கொன்ற சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

நம் குழந்தைகள் ஒவ்வொரு துறையிலும் புதிய சிகரங்களைத் தொடட்டும்: எடப்பாடி பழனிசாமி

சென்னை, நவ.15 வண்ணக் கனவுகளோடு சிறகடிக்கும் நம் செல்லக் குழந்தைகள் ஒவ்வொரு துறையிலும் புதிய சிகரங்களைத் தொடட்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். இன்று ஜவஹர்லால் நேரு பிறந்தநாள்சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர்ஜவஹர்லால் நேரு 1889ம் ஆண்டு நவம்பர் 14ந்தேதி உத்தரபிரதேச மாநிலம் அலகாபாத்தில் (தற்போது பிரயாக்ராஜ்) மோதிலால் நேரு ஸ்வரூப் ராணி தம்பதியின் மகனாகப் பிறந்தார். 'நவீன இந்தியாவின் சிற்பி' என்று அழைக்கப்படும் ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளான நவம்பர் 14ந்தேதி குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில் இன்று நேருவின் பிறந்தநாளையொட்டி அரசியல் தலைவர்கள் அவரது நினைவைப் போற்றி, மரியாதை செலுத்தி வருகின்றனர்.குழந்தைகள் தினம்: எடப்பாடி பழனிசாமி வாழ்த்துஇந்த நிலையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள குழந்தைகள் தின வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது: வண்ணக் கனவுகளோடு சிறகடிக்கும் நம் செல்லக் குழந்தைகள்,

ஒவ்வொரு துறையிலும் புதிய சிகரங்களைத் தொடட்டும். அன்பும், நல்ல வழிகாட்டுதலும் கொடுத்து அவர்களின் பாதையை அழகாக்குவோம். என் அன்பிற்குரிய குழந்தைகள் அனைவருக்கும் இனிய குழந்தைகள் தின நல்வாழ்த்துகள்!இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மனநலம் பாதிக்கப்பட்ட இளம்பெண்ணுக்கு கூட்டுப் பாலியல் வன்கொடுமை: 5 பேர் கைது

கன்னியாகுமரி, நவ.15 கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை பகுதியைச் சேர்ந்த 23 வயது இளம் பெண் ஒருவர் சற்று மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்துள்ளார். இதற்காக அவர் கடந்த 7 ஆண்டுகளாக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவர் அடிக்கடி வீட்டைவிட்டு வெளியே செல்வதும், பின்னர் குடும்பத்தினர் அவரைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்து வருவதும் வழக்கமாக இருந்துள்ளது.

இந்த நிலையில் சம்பவத்தன்று வீட்டிலிருந்து வெளியேறிய அந்த இளம் பெண், தக்கலை அருகே உள்ள கீழ்கல்குறிச்சி பகுதிக்குச் சென்றுள்ளார். அன்று இரவு, அவர் வீடு திரும்பாததால் பதற்றமடைந்த குடும்பத்தினர் நாலாபுறமும் தேடி வந்தனர். அப்போது கீழ்கல்குறிச்சி பகுதியில் மிகுந்த சோர்வடைந்த நிலையில்நின்று கொண்டிருந்த இளம்பெண்ணை குடும்பத்தினர் மீட்டு விசாரித்தபோது, அவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான திடுக்கிடும் தகவல் தெரியவந்தது.

இதுகுறித்து மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன் பேரில் போலீசார் நடத்திய தீவிர விசாரணையில் பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகின. கீழ்கல்குறிச்சி பகுதியில் தனியாக நின்றிருந்த அந்த இளம்பெண்ணிடம், அதே பகுதியைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் சிபின் (வயது 32) என்பவர் நைசாகப் பேச்சுக் கொடுத்துள்ளார். அன்று சிபின் வீட்டில் யாரும் இல்லாததை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட அவர், அந்த இளம்பெண்ணை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். அது மட்டுமின்றி தனது நண்பர்களான, அதே பகுதியைச் சேர்ந்த மணிகண்டன், சிஜோ, ராபின் மற்றும் கிங்ஸ்லி ஆகிய 4 பேருக்கும் தகவல் தெரிவித்து வர வழைத்துள்ளார். தொடர்ந்து 5 பேரும் சேர்ந்து அந்த இளம்பெண்ணை கூட்டுப்பாலியல்வன்கொடுமை செய்துவிட்டு, மறுநாள் காலையில் அவரை அப்பகுதியில் விட்டுச் சென்றது போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

இச்சம்பவம் தொடர்பாக சிபின், மணிகண்டன், சிஜோ, ராபின் மற்றும் கிங்ஸ்லி ஆகிய 5 பேர் மீதும் மார்த்தாண்டம் போலீசார் வழக்குப்பதிவு செய்து தேடி வந்தனர். போலீஸ் விசாரணையை அறிந்து தலைமறைவாக இருந்த 5 பேரையும் போலீசார் சுற்றிவளைத்து மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர். மனநலம் பாதிக்கப்பட்ட இளம்பெண்ணுக்கு நேர்ந்த இக்கொடூரச் சம்பவம் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆலங்குளத்தில் லாரி மோதி ஒருவர் பலி: ஓட்டுநர் கைது

தென்காசி, நவ.15 ஆலங்குளம் அருகே யுள்ள குறிப்பன்குளத்தைச் சேர்ந்த சண்முகவேல் மகன் ஜார்ஜ் (வயது 52). இவர் ஆலங்குளத்தில் பழைய கார் விற்பனையகம் நடத்தி வந்தார். இந்த நிலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) இரவு தென்காசி சாலையில் உள்ளபெட்ரோல்நிலையத்தில் தனது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் நிரப்பியுள்ளார்.

பின்னர் சாலையைக் கடப்பதற்காக ஓரமாக வாகனத்தை நிறுத்திவிட்டு நின்றிருந்தார். அப்போது அந்த வழியாக அதிவேகமாக வந்த லாரி, எதிர்பாராத விதமாக ஜார்ஜ் மீது பயங்கரமாக மோதியது. இதில் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.



விபத்தை ஏற்படுத்திய லாரி ஓட்டுநர், வாகனத்தை நிறுத்தாமல் தாறுமாறாக ஓட்டி தப்பிச் செல்ல முயன்றார். இதைக் கண்ட அங்கிருந்த இளைஞர்கள், உடனடியாக தங்களது வாகனங்களில் லாரியை துரத்திச் சென்று சினிமா பாணியில் மடக்கிப் பிடித்தனர். பின்னர் லாரி ஓட்டுநரைப் பிடித்து ஆலங்குளம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ஆலங்குளம் போலீசார், உயிரிழந்த ஜார்ஜின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும், பிடிபட்ட லாரி ஓட்டுநரைக் கைது செய்த போலீசார், விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட கணவர்: காவல் நிலையத்திற்குள் பெட்ரோல் ஊற்றி தீக்குளித்த பெண்

கடலூர், நவ. 15 கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள ஒறையூரை சேர்ந்தவர் லட்சாதிபதி. இவரது மனைவி கண்மணி (வயது 28). இவர் ஒறையூர்ஊராட்சியில்'விபிஜி ராம் ஜி' திட்டத்தின் கீழ் நடந்து வரும் 125 நாள் வேலை வழங்கும் ஊராட்சி திட்டத்தில் பணிதள பொறுப்பாளராக இருந்து வருகிறார். அதே ஊராட்சியில் அதே பகுதியை சேர்ந்த அருள்(53) என்பவர் ஊராட்சி எழுத்தராக பணிபுரிந்து வருகிறார்.

இந்த நிலையில், 125 நாள் வேலை கொடுப்பதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கண்மணிக்கும், ஊராட்சி எழுத்தர் அருளுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதில்,கண்மணிதன்னை அருள் தாக்கியதாக புதுப்பேட்டை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். இதேபோன்று அருள், தன்னை கண்மணியும் அவரது கணவர் லட்சாதிபதியும் சேர்ந்து தாக்கியதாக புகார் அளித்தார். மேலும், அருள் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகவும் சேர்க்கப்பட்டார்.



இதனிடையே இருதரப்பினரும் அளித்த புகாரின் பேரில், அவர்களிடம் விசாரணை நடத்த காவல் நிலையத்திற்கு அழைத்திருந்தனர். அந்த வகையில், ஊராட்சி எழுத்தர் அருளை தாக்கியதாக கூறி லட்சாதிபதியைகாவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்று அங்கு உட்காரவைத்திருந்தனர்.

இதுபற்றி அறிந்த கண்மணி, மாலை 4.30 மணியளவில் காவல் நிலையம் வந்தார். அவர் எனது கணவர் எந்த தவறும் செய்யவில்லை அவரை விடுவிக்க வேண்டும் என்று கூறியவாறு, காவல் நிலைய நுழைவு வாயிலில் நுழைந்து, தான் ஒரு கேனில் எடுத்து வந்திருந்த பெட்ரோலை தன் மீது திடீரென ஊற்றிக் கொண்டார்.

இதை சற்றும் எதிர்பாராத போலீசார், அவரை தடுக்க முயன்ற போது, கையில் வைத்திருந்த தீப்பெட்டியால் தீக்குச்சியை உரசி கண்மணி பற்றவைத்தார். இதில் குபீரென தீ அவரது உடலில் பற்றி எரிந்தது. உடலில் எரிந்த தீயுடன் அவர் நுழைவு வாயிலில் இருந்து காவல் நிலையம் உள்ளே ஓடினார்.

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த இந்த சம்பவத்தால் அங்கிருந்த போலீசார் அதிர்ச்சியடைந்தனர். இருப்பினும் அவர்கள் துரிதமாக செயல்பட்டு கண்மணி மீது பற்றி எரிந்த தீயை அணைத்தனர். தொடர்ந்து, அவரை மீட்டு பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு டாக்டர்கள் உரிய சிகிச்சை அளித்து, பின்னர் மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

இதனிடையே காவல் நிலையத்திற்குள் பெண் தீக்குளித்த சம்பவத்தால், அங்கு பதற்றம் அதிகரித்தது. இந்த சம்பவத்தை கண்டித்து கண்மணியின் உறவினர்கள் காவல் நிலையம் முன்பு அரசூர் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். அவர்களிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி கலைந்து போக செய்தனர்.

ஸ்ரீபெரும்புதூர் அருகே சுங்கச்சாவடியில் தடையில்லா சுங்கக் கட்டணம் வசூல்: வாகன ஓட்டிகள் வரவேற்பு

காஞ்சீபுரம், நவ.15 தேசிய நெடுஞ்சாலையில் ஆங்காங்கே சுங்கச்சாவடியில் தடுப்பு அமைத்து வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வந்தது. சுங்கச்சாவடிகளில் வாகன நெரிசலை தவிர்க்கும் வகையில் தடையற்ற சுங்கக்கட்டணம் வசூலிக்கும் முறை அமல்படுத்தப்பட்டு வருகிறது. சுங்கச்சாவடிகளில் தடுப்புகள் எதுவும் இல்லாமல் தானியங்கி கேமராக்கள் மூலம் வாகனங்களின் நம்பர் பிளேட் மற்றும் பாஸ்டேக் போன்றவை ஒருங்கிணைக்கப்பட்டு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்த தடையற்ற தானியங்கி சுங்கக்கட்டணம் நடைமுறை தமிழகத்தில் முதல் முறையாக செங்கல்பட்டு அருகே பரனூர்சுங்கச்சாவடியில் கடந்த அக்டோபர் மாதம் முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் பரனூர் சுங்கச்சாவடியில் தற்போது வாகனங்கள் எந்தவித காத்திருப்பும் இல்லாமல் தானியங்கி முறையில் சுங்கக்கட்டணம் செலுத்திவிட்டு செல்வதால் அந்த பகுதியில் வாகன நெரிசல் முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. இதனை வாகன ஓட்டிகள் வரவேற்றுள்ளனர். அனைத்து சுங்கச்சாவடிகளிலும் இந்த நடைமுறையை கொண்டு வரவேண்டும் என்று வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கிடையே தற்போது சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் செல்லும் வாகன ஓட்டிகளுக்கு வசதியாக காஞ்சீபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள நெமிலி சுங்கச்சாவடியில் தடையில்லா சுங்கக்கட்டணம் வசூலிக்கும் முறை நேற்று



முன்தினம் நள்ளிரவு முதல் அமலுக்கு வந்துள்ளது.

சுங்கச்சாவடிகளில் ஏ.ஐ. தொழில்நுட்பத்துடன் உள்ள கேமராக்கள் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள பாஸ்டேக், வாகனங்களின் பதிவு எண்ணை ஒப்பிட்டு அதனுடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கில் இருந்து சுங்கக்கட்டணம் தானாகவே கழிக்கப்படும்.

இதனால் வழக்கமான சுங்கச்சாவடிகளில் வாகனங்கள் வரிசையில் காத்திருக்கும் நிலை தவிர்க்கப்படும். தமிழகத்தில் தடையில்லா சுங்கக்கட்டணம் வசூல் முறை பரனூரை தொடர்ந்து நெமிலி சுங்கச்சாவடியில் கொண்டு வரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. படிப்படியாக அனைத்து சுங்கச்சாவடிகளிலும் இந்த நடைமுறை கொண்டு வரப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விரைவில் சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் வாலாஜா அருகே உள்ள சென்னசமுத்திரம் சுங்கச்சாவடியிலும் சோதனை ஓட்டங்களுக்கு பிறகு இந்த திட்டத்தை செயல்படுத்த தேசிய நெடுஞ்சாலை ஆணையம் முடிவு செய்துள்ளது. பாஸ்டேக்கில் போதுமான பணம் இல்லை என்றாலோ செல்லாத பாஸ்டேக் வைத்திருந்தாலோ சுங்கக்கட்டணத்தை போல் இருமடங்கு அபராதம் விதித்து மின்னணு நோட்டீஸ் அனுப்பப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

15.11.2026

செக்கானூரணி காவல் நிலையத்தில் லாரி டிரைவர் தற்கொலை: இன்ஸ்பெக்டர் உள்பட 3 போலீசார் சஸ்பெண்ட்



தேனி, நவ. 15

தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவர் பாலகிருஷ்ணன். லாரி டிரைவரான இவர் கம்பத்தில் இருந்து ஏலக்காய் லோடு ஏற்றி சென்றுள்ளார். செல்லும் வழியில் லாரி தீப்பிடித்து எரிந்துள்ளது. இது தொடர்பாக மதுரை செக்கானூரணி போலீஸ் ஸ்டேஷனிற்கு புகார் கொடுக்க வந்திருந்தார். புகாரில் சந்தேகம் இருந்த தால் ஸ்டேஷனில் இருக்கு மாறு போலீசார் கூறியுள்ள னர். இந்த நிலையில், போலீஸ் ஸ்டேஷனில் உள்ள கழிவறையில் தூக் கிட்டு தற்கொலை செய்து கொண்டார். தூக்கில் தொங்கிய படி உடல் மீட் கப்பட்டுள்ளது. பிரேத பரி சோதனைக்காக மதுரை ராஜாஜி மருத்துவம னைக்கு அனுப்பி வைக்கப் பட்டது. காவல் நிலையத்தில் தற்கொலை செய்து கொண்டதாக கூறப் படும் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், மாவட்ட எஸ்பி நேரில் சென்று விசா ரணை நடத்தினார்.

இதையடுத்து வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட் டுள்ளது. காவல் ஆய்வா ளர், 2 காவலர்கள் சஸ் பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். இதற்கிடையே, தற் கொலை செய்து கொண்ட தாக கூறப்படும் லாரி டிரை வர் பாலகிருஷ்ணனின் உறவினர்கள் காவல் நிலை யத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட் டுள்ளனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

விநாயகர் கோவிலில் ரூ.14 லட்சம் வெள்ளி பொருட்கள் திருட்டு: 2 பேர் கைது



சென்னை, நவ.15

சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டை டைனிங் சென்டர் முதலாவது தெருவில் உள்ள ஐஸ்வர்ய விநாயகர் கோவிலின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்த மர்ம நபர்கள் 7 கிலோ எடையுள்ள ரூ.14 லட்சம் மதிப்பிலான வெள்ளிப் பொருட்களை திருடிச் சென்றனர்.

இதுகுறித்து அம்பத்தூர் தொழிற்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். இதுதொடர்பாக பீகார் மாநிலத்தைச் சேர்ந்த சந்தோஷ்குமார், நெல்லையைச் சேர்ந்த சிவலிங்கம் ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 11 கிலோ வெள்ளி, ரூ.1 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. இதேபோல் துரைப்பாக்கம் அடுத்த மேட்டுக்குப்பம் சுந்தர விநாயகர் கோவிலில் நேற்று அதிகாலை உண்டியலை உடைத்த 2 பேரில் ஒருவரை பொதுமக்கள் சுற்றிவளைத்து பிடித்தனர். மற்றொருவர் தப்பியோடினார். பிடிபட்டவர் நேபாளத்தைச் சேர்ந்த 30 வயது வாலிபர் என்பதும், கட்டிட வேலை செய்து வந்த அவர் உண்டியல் பணத்திற்காக கொள்ளையில் ஈடுபட்டதும் தெரியவந்தது. அவரை துரைப்பாக்கம் போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இன்றைய ராசி பலன்கள் (15.11.2026)

மேஷம் — புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

ரிஷபம் — தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது. உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

மிதுனம் — மனதில் உற்சாகம் அதிகரிக்கும். வேலைகளில் சாதகமான மாற்றங்கள் ஏற்படும். நண்பர்களால் நன்மை உண்டு.

கடகம் — குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் குறித்த பேச்சு நடைபெறும். பண விஷயங்களில் கவனம் தேவை.

சிம்மம் — மதிப்பும் மரியாதையும் உயரும். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் கிடைக்கலாம்.

கன்னி — திட்டமிட்ட செயல்கள் நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது.

துலாம் — புதிய அறிமுகங்கள் நன்மை தரும். கணவன் மனைவி இடையே அன்பும் ஒற்றுமையும் அதிகரிக்கும்.

விருச்சிகம் — பொறுமையுடன் செயல்படுங்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கலாம். உடல்நலத்தில் கவனம் தேவை.

தனுசு — அதிர்ஷ்டம் துணை நிற்கும் நாள். கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் நல்ல செய்தி கிடைக்கலாம்.

மகரம் — தொழில் ரீதியாக முன்னேற்றம் ஏற்படும். பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

கும்பம் — புதிய வாய்ப்புகள் தேடி வரும். நண்பர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். தேவையற்ற வாக்கு வாதங்களைத் தவிர்க்கவும்.

மீனம் — மனநிறைவு தரும் செய்திகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆன்மிக நாட்டம் உண்டாகும்.

அரிசி, பருப்பு, சர்க்கரை இருப்புக்கு கட்டுப்பாடு விதித்து தமிழக அரசு உத்தரவு!

சென்னை, நவ.15

பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள், நியாயமான விலையில் கிடைக்க இருப்பு வரம்பை நிர்ணயித்து தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. கட்டுப்பாட்டு ஆணை இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழ்நாடு அரசு, 1955 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் பிரிவு 3இன் கீழ், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, அரிசி / நெல் மற்றும் சர்க்கரை ஆகியவற்றுக்கு இருப்பு வரம்புகளை நிர்ணயித்தும், இருப்புவிவரங்களை தொடர்ந்து அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தியும் கட்டுப்பாட்டு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இந்த ஆணைகள், இந்திய அரசின் முன் இசைவுடன், அரசிதழ் எண்கள். 486, 487 நாள். 13.11.2026 இல் வெளியிடப்பட்டுள்ளன. இந்திய அரசிதழின் படி சர்க்கரைக்கு மறுபதிப்பு அரசிதழ் எண் 490, நாள் 13.11.2026 இல் வெளியிடப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்கள் மாநிலத்தில் துவரம் பருப்பு, அரிசி மற்றும் சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்பாட்டில் வைக்கவும், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி மற்றும் பிற பொருட்களின் விநியோகம் தடையின்றித் தொடரவும் அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்கிறது. இந்த வரம்புகள் அரசிதழில் வெளியிடப்பட்ட 13.11.2026 ஆம் நாள் முதல் மூன்று மாதங்கள் வரை துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பிற்கும், 31.01.2027 வரை அரிசி மற்றும் நெல்லுக்கும் நடைமுறையில் இருக்கும். எந்தவொரு நபரோ அல்லது நிறுவனமோ கீழ்க்கண்ட வரம்புகளுக்கு மேல் இருப்பு வைத்திருக்கக் கூடாது. 15 நாட்களுக்கு மேல்மேலும், இந்திய அரசு 2026 நவம்பர் 6ம் தேதி அன்று பிறப்பித்த ஆணையின்படி, ஒவ்வொரு வணிகரும், மொத்த வணிகரும், சில்லறை வணிகரும், பெரிய தொடர்சில்லறை விற்பனை நிறுவனமும், ஆலை உரிமையாளரும், பதனிடுவோரும் அரிசி / நெல் இருப்பை, உணவு இருப்பு இணையதளத்தில் (foodstock.dfpd.gov.in) அறிவித்து, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அதனைப் புதுப்பிக்க வேண்டும். அதேபோன்று, துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு இருப்பையும், பருப்பு வகைகளுக்கென நிர்ணயிக்கப்பட்ட இணையதளத்தில் (fcain foweb.nic.in) அதே முறையில் சர்க்கரை இருப்பையும் அறிவிக்க வேண்டும். ஆணை பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் வரம்புக்கு மேல் வைத்திருக்கும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் அரிசி / நெல் இருப்பை, 16.11.2026 நாட்களுக்குள் நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்குள் கொண்டு வர வேண்டும். சர்க்கரையைப் பொறுத்தவரை, எந்தவொரு வணிகரும் சர்க்கரை இருப்பைப் பெற்ற தேதியிலிருந்து 15 நாட்களுக்கு மேல் அந்தச் சர்க்கரை இருப்பைத் தன்னிடம் வைத்திருக்கக் கூடாது. குழு அமைப்பு இதன் மூலம் பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தை போன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும், இவற்றை கண்காணிக்கவும், மாவட்ட வழங்கல் அலுவலர் தலைமையில் வட்ட வழங்கல் அலுவலர் மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாணைகள், விவசாயிகள் தங்களது சொந்த வேளாண் விளைபொருட்களை இருப்பு வைத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. அனைத்து நுகர்வோருக்கும் அத்தியாவசியப் பொருட்கள் நியாயமான விலையில் போதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்வதில், வணிகர்கள், ஆலை உரிமையாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் முழு ஒத்துழைப்பை அரசுக்கு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உதவி எண்புகார்களையும் தகவல்களையும் கட்டணமில்லா உதவி எண் 1967 / 1800 425 5901க்கோ அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரிடமோ தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடைந்தது: நாளை உருவாகும் புயல்

சென்னை, நவ.15

மத்திய அந்தமான் கடல் பகுதிகள் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவு பகுதிகளின் மேல் நிலவிய வளிமண்டல சுழற்சி காரணமாக தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நேற்று குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று (சனிக்கிழமை) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாகவும், நாளை (ஞாயிற்றுக்கிழமை) காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற உள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்திருந்தது.

இது மேலும் வடக்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து மத்திய வங்கக்கடல் பகுதியில் நாளை புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப்பகுதியுடன் தொடர்புடைய வளிமண்டல சுழற்சியில் இருந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் வழியாக மாலத்தீவின் வடக்கு பகுதிகள் வரை காற்றழுத்த தாழ்வுபாதை நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், திருப்பூர், தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி மற்றும் நெல்லை ஆகிய மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், வட கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் மழை பெய்யக்கூடும் என்றும், நாளையும், நாளை மறுதினமும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென்தமிழகம், வடகடலோர தமிழகத்தின் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் சென்னை வானிலை மையம் கூறி இருந்தது.

இந்நிலையில் தென் கிழக்கு வங்கக்கடலில் நேற்று (நவ.13) உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றுள்ளது. இது அடுத்த 24 மணி நேரத்தில் வடமேற்குத் திசையில் நகர்ந்து, காற்றழுத்தத் தாழ்வுப் மண்டலமாக வலுப்பெற்று, நவம்பர் 16ம் தேதி மாலை மத்திய வங்க கடல் பகுதியில் புயலாக (அக்வான் புயல்) மாற வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

டி20 கிரிக்கெட்டில் இளம் கேப்டன்... 15 வயதில் புதிய உலக சாதனை படைத்த வைபவ் சூர்யவன்ஷி



வெறும் 15 வயதில் பீகார் அணியின் கேப்டனாகக் களமிறங்கிய வைபவ் சூர்யவன்ஷி, ஆண்கள் டி20 கிரிக்கெட் வரலாற்றிலேயே இளம் கேப்டன் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்று வரும் சையத் முஷ்டாக் அலி கோப்பை டி20 தொடரில் பீகார் அணி தனது முதல் ஆட்டத்தில் சவுராஷ்டிராவை எதிர்கொண்டது. இந்தூரில் உள்ள ஹோல்கர் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பீகார் அணியின் கேப்டனாக வைபவ் சூர்யவன்ஷி களமிறங்கினார்.

அப்போது அவருக்கு 15 வயது 232 நாட்கள் மட்டுமே. இதன் மூலம் ஆண்கள் டி20 கிரிக்கெட் வரலாற்றில் மிக இளம் வயதில் ஒரு அணிக்குத் தலைமை தாங்கிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதற்கு முன்பு குரோஷியாவின் சாக் வுகுசிக், 17 வயது 311 நாட்களில் தனது நாட்டின் அணிக்குத் தலைமை தாங்கி டி20 சர்வதேசப் போட்டியில் களமிறங்கியதே சாதனையாக இருந்தது. கடந்த 2025ம் ஆண்டு ஆகஸ்ட் 7ம் தேதி சைப்ரஸ் அணிக்கு எதிராக அவர் இந்தச் சாதனையைப் படைத்திருந்தார். தற்போது வைபவ் அதை முறியடித்துள்ளார்.

இந்த போட்டியில் வைபவ் பேட்டிங்கில் பெரிய அளவில் ரன் குவிக்கவில்லை. தொடக்க வீரராகக் களமிறங்கிய அவர், 12 பந்துகளில் 18 ரன்கள் எடுத்தார். இதில் 2 பவுண்டரிகளும் ஒரு சிக்ஸரும் அடங்கும். சேத்தன் சகரியாவின் பந்துவீச்சில் அவரிடமே கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தப் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பீகார் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 137 ரன்கள் எடுத்தது. இலக்கை விரட்டிய சவுராஷ்டிரா அணி 16.3 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 138 ரன்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சையத் முஷ்டாக் அலி கோப்பையில் பீகார் அணிக்காக முதல் 2 ஆட்டங்களில் மட்டும் அவர் கேப்டனாக செயல்பட உள்ளார். அதன்பிறகு, நவம்பர் 19ம் தேதி கத்தாரின் தோஹாவில் தொடங்கும் வளர்ந்து வரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை தொடரில் இந்தியா ஏ அணிக்காக விளையாட உள்ளார்.

இளம் வயதிலேயே இந்திய அணியிலும், உள்ளூர் கிரிக்கெட்டிலும் கவனம் ஈர்த்து வரும் வைபவ் சூர்யவன்ஷி, தற்போது கேப்டனாகவும் உலக சாதனை படைத்திருப்பது கிரிக்கெட் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஷாருக்கான் அதிரடி.. ரெயில்வே அணிக்கு 173 ரன்கள் இலக்கு நிர்ணயித்த தமிழ்நாடு



சையத் முஷ்டாக் அலி கோப்பை டி20 கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டத்தில் தமிழ்நாடு அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 172 ரன்கள் குவித்துள்ளது. இதனால் ரெயில்வே அணிக்கு 173 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 கிரிக்கெட் தொடரான சையத் முஷ்டாக் அலி கோப்பை இன்று தொடங்கியது. டிசம்பர் 6ம் தேதி வரை நடைபெறும் இந்தத் தொடரில் எலைட் பிரிவில் 32 அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

தொடக்க நாளில் நடைபெறும் ஆட்டங்களில் ஒன்றில் தமிழ்நாடு ரெயில்வே அணிகள் மோதுகின்றன. இந்தூரில் உள்ள டேலி கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ரெயில்வே அணியின் கேப்டன் முகம்மது சைப் பந்துவீச்சைத் தேர்வு செய்தார். இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த தமிழ்நாடு அணி 172 ரன்கள் எடுத்தது.

தொடக்க வீரர் அமித் சத்விக் 28 பந்துகளில் 38 ரன்கள் எடுத்தார். பி. சச்சின் 34 பந்துகளில் 33 ரன்கள் சேர்த்தார். ஷாருக் கான் அதிரடியாக விளையாடி 30 பந்துகளில் 46 ரன்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இறுதிக்கட்டத்தில் ஆர். ராஜ்குமார் 13 பந்துகளில் 31 ரன்கள் விளாசினார். இதனால் தமிழ்நாடு அணி 20 ஓவர்களில் 172 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 173 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ரெயில்வே அணி விளையாட உள்ளது.

காளிதாஸ் ஜெயராம் நடிக்கும் "மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ்" படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு



காளிதாஸ் ஜெயராம் நடிக்கும் 'மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ்' திரைப்படம் வரும் டிசம்பர் 4ம் தேதி வெளியாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல நடிகர் ஜெயராம் தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் பல்வேறு படங்களில் நடித்துள்ளார். இவர் நடிப்பில் முறை மாமன், தெனாலி, பஞ்சதந்திரம் ஆகிய படங்கள் மிகவும் பிரபலம். அவரது மகன் காளிதாஸ் ஜெயராம் தமிழில் மீண்குழம்பும் மண் பானையும், பூமரம், ஒருபக்க கதை ஆகிய படங்களில் தனது ஆரம்ப காலகட்டங்களில் நடித்தார். பின்னர் சுதா கொங்குரா இயக்கத்தில் காளிதாஸ் ஜெயராம் நடித்த 'பாவக் கதைகள்' ஆந்தாலஜி தொடரில் அவரது நடிப்பு பெரும் பாராட்டை பெற்றது. அந்த படத்தில் திருநங்கையாக வித்தியாசமான கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். பின்னர் விக்ரம், இந்தியன் 2 ஆகிய படங்கள் சிறிய வேடங்களில் நடித்திருந்தார். கடைசியாக தனுஷ் நடிப்பில் வெளியான 'ராயன்' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

அஹ்மது கபிர் இயக்கத்தில் உருவாகியுள்ள 'மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ்' படத்தில் காளிதாஸ் ஜெயராம் நாயகனாகவும் லட்சுமி ஜோதிஷ் நாயகியாகவும் நடித்துள்ளார்கள். இப்படத்தில் லால், பொப்பன் அலுமூடன், சஞ்சு சானிச்சென், சோசம்மா மற்றும் ரெஞ்சித் சேகர் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்தப் படத்துக்கான திரைக்கதையை ஜாபின் ஜான் உடன் இணைந்து அஹ்மது கபிர் எழுதியுள்ளார். கோவிந்த் வசந்தா இசையமைத்து வருகிறார். அஹ்மது கபிர் ஜூன், மதுரம் படங்களை இயக்கியுள்ளார். கேரள கிரைம் பைல்ஸ் என்ற வெப் தொடரின் முதலிரண்டு சீசன்களையும் அவர் இயக்கியுள்ளார்.

மங்கி பிஸினஸ் தயாரிக்கும் இந்தப் படம் தமிழ் மற்றும் மலையாளத்தில் உருவாகியுள்ளது. தமிழ்நாட்டில் இந்தப் படத்தை ரோமியோ பிக்சர்ஸ் வெளியிடுகிறது.

இந்தப் படம் காதல், நட்பு, குடும்ப உறவுகள் தொடர்பாக உருவாகியுள்ளது. ரொமான்டிக் நகைச்சுவை கலந்த காதல் படமாக இருக்குமென படக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், 'மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ்' படம் தமிழ் மற்றும் மலையாளத்தில் வரும் டிசம்பர் 4ஆம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

மீண்டும் படப்பிடிப்புக்கு தயாராகும் ரஜினிகாந்த்... 'தர்மன்' படத்தின் அடுத்தகட்ட பணிகள்!



இந்த படத்தின் புதிய அப்டேட் கிடைத்துள்ளது, அதாவது, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் 'தர்மன்' படத்தின் அடுத்தகட்டப் படப்பிடிப்பு நவம்பர் 23ஆம் தேதி தொடங்கஉள்ளதாகவும், நீண்டநாட்கள்நடைபெறும் படப்பிடிப்பாக இது இருக்கும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

நடிகர்ரஜினிகாந்த்தற்போதுதனது173வதுதிரைப்படமான 'தர்மன்' படத்தில் நடித்து வருகிறார். 'ஓ மை கடவுளே', 'டிராகன்' ஆகிய படங்களை இயக்கிய அஷ்வத் மாரிமுத்து இப்படத்தை இயக்கி வருகிறார். கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் இப்படத்தைத் தயாரிக்கிறது.

ஆக்ஷன் கதைக்களத்தில் உருவாகும் இப்படத்தில் ரஜினிகாந்த்மருத்துவர்கதாபாத்திரத்தில்நடித்துவருவதாகக் கூறப்படுகிறது. நயன்தாரா, ஸ்ரீலீலா, சிம்ரன், ராஷி கன்னா, யோகி பாபு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். அனிருத் இசையமைக்கிறார். நிகேத் பொம்மி ஒளிப்பதிவு செய்ய, பிரதீப் ஈ. ராகவ் படத்தொகுப்புப் பணிகளை மேற்கொள்கிறார்.

இதற்கிடையில், பிரபல தெலுங்கு நடிகர் ராம் பொத்தினேனி இப்படத்தில் இணைந்துள்ளதாக படக்குழு புரோமோ வெளியிட்டு அறிவித்துள்ளது. இதன் மூலம் அவர் தமிழ் சினிமாவில் அறிமுகமாகிறார். இப்படத்தில் ரஜினிகாந்துக்கு வில்லனாக அவர் நடிக்க இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் ரசிகர்கள் மத்தியில் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

'தர்மன்' திரைப்படத்தின் அடுத்தகட்ட அப்டேட்டாக, நடிகர் ரஜினிகாந்தின் பிறந்தநாளான டிசம்பர் 12ந்தேதி இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகும் என்று இயக்குநர் தெரிவித்திருந்தார். அது 'தர்மன்' படத்தின் டீசர் அல்லது முக்கிய முன்னோட்டக் காட்சி வெளியாகலாம் என்று ரசிகர்கள் எதிர்பார்த்து வருகின்றனர். ரஜினிகாந்தின் பிறந்தநாளில் வெளியாகவுள்ள இந்த அறிவிப்பு ரசிகர்களின் ஆவலை மேலும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், இந்த படத்தின் புதிய அப்டேட் கிடைத்துள்ளது, அதாவது, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் 'தர்மன்' படத்தின் அடுத்தகட்டப் படப்பிடிப்பு நவம்பர் 23ஆம் தேதி தொடங்க உள்ளதாகவும், நீண்ட நாட்கள் நடைபெறும் படப்பிடிப்பாக இது இருக்கும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. இப்படம் 2027ம் ஆண்டு தமிழப் புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 14ம் தேதி வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

PRINTED BY KANIRAJA V. PUBLISHED BY KANIRAJA V. ON BEHALF OF NAMADHU DHINA KANI TAMIL DAILY AND PRINTED AT SEAMAN GRAPHICS No. 7/253, KVN PURAM 2 2ND STREET, KILPAUKGARDEN, CHENNAI 600010. AND PUBLISHED AT No.28, THALIKATTIPALAYAM, KAITHAMALAI ROAD, UTTUKULI, TIRUPPUR - 638751. EDITOR: KANI RAJA V.